**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 131/2024

ம.சா1 ஆவணிபுஷ்பம்

| | | |
|---|---|---|
| Name | : | ஆவணி புஷ்பம் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 04.06.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர். நான் எனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1
2. என் கணவரின் விபத்து பதிவேடு ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2
3. முருகேசன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3
4. டி.என். 28 ஏ.9339 என்ற வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4
5. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5
6. விபத்தில் இறந்து போனவரின் இறப்பு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 6
7. விபத்தில் இறந்து போனவரின் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 7

மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து காலை 6 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் கணவர் Chartered Accounts படிக்கவில்லை. கடைகளுக்கு சென்று வரவு செலவு கணக்கு மட்டும் எழுதுவார். என் கணவருக்கு மாதம் ரூ.50 ஆயிரம் வருமானம் வந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் வருமானவரி

செலுத்தியது கிடையாது. 3 ம் மனுதாரருக்கு திருமணம் ஆகவில்லை. 3 ம் மனுதாரர் Reserarch Practicner என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 ம் மனுதாரர் மருத்துவ படிப்பு படித்து வருகிறார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல்துறைக்கு தகவல் கொடுத்தது நான் தான். அதில் பதிவு எண் தெரியாத லாரி என்று தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ரூ.40 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் சேதம் அடைந்தது என்று புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் பத்தி 9ல் 5 முதல் 9 இனங்களுக்கான இழப்பீடு அதிகமாக கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றால் சரியல்ல. என் கணவர் தான் சாலையில் வந்த வாகனத்தை கவனிக்காமல் திடீரென ரோட்டின் குறுக்கே சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. லாரியின் முன்பக்கம் எதுவும் விபத்து நடக்கவில்லை என்பதால் தான் லாரி நிற்காமல் போய்விட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த அன்று காலை 9.30 மணிக்கு என் கணவர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். தென்காசி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததில் நான் மீரான் தனியார் மருத்துவமனையில் என் கணவரை சிகிச்சைக்காக அழைத்து சென்றேன் என்றால் சரிதான். மீரான் மருத்துவமனையில் சிகிச்சை 1/2 மணி நேரம் நடந்திருக்கும். அதற்குள் என் கணவர் இறந்து விட்டார். ரூ.2 லட்சத்திற்கு மேல் உயிர்காக்கும் மருந்துகள் வாங்கியதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 3 பிரேத பரிசோதனை அறிக்கையில் என் கணவருக்கு வயது 62 என சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறாக போட்டுள்ளனர். எனது வயது 57. எனது கணவர் என்னை விட 5 வயது மூத்தவர். அவ்வாறு என்றால் என் கணவரின் வயது 62 என்பது சரியானது தான் என்றால் சரிதான்.

(Sd)K.சுதா ராணி,<br>
கூடுதல் சார்பு நீதிபதி,<br>
தென்காசி.